[1968 ஆகஸ்ட் 23

Post of Secretary to Government.

*101 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to re-designate the posts of 'Secretary to Government' as 'Secretary to a particular Ministry'?

THE HON. THIRU C. N. ANNADURAI : No, Sir.

திரு. ஏ. எம். ராஜா : தலைவரவர்களே, பல சந்தர்ப்பங்களில் அமைச்சர்களுக்கு விரோதமாகக்கூட நடக்கக்கூடிய நிலைமை உருவாக முடிகிறது. இதை நீக்க "அரசாங்கச் செயலாளர்" என்ற நிலையை மாற்றி "அமைச்சகத்தின் செயலாளர்" என்று அமைக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் கூறும் இடர்ப்பாடுகளைப் பற்றி இந்த அரசுக்கு எந்தவிதமான தகவலும் இல்லை.

Provision of scooters to Sub-Inspectors

*102 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have proposed to provide Sub-Inspectors of Police in Tamilnad, with scooters ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், நம் மாநிலத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கு ஏராளமான கிராமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 10 மைல்களுக்கு அப்பால் போலீஸ் காவல் நிலையம் இருப்பதால் தொடர்ந்து அவர்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. குற்றம் நடந்தவுடன் அந்த இடத்தில் விரைந்து சென்று உடனடியாகக் கவனிப்பதற்கு இந்த அரசு அவர்களுக்கு ஸ்கூட்டர்கள் கொடுக்க முடியா விட்டாலும் கூட சர்க்கார் நடத்தும் லாட்டரி சீட்டிலே 100 சீட்டுகளை இலவசமாகவோ, அல்லது கடனாகவோ கொடுத்து அவர்கள் யோகக்காரர்களாக இருந்தால் பரிசு விழுந்து அதன் மூலம் இந்த வாகனங்கள் வாங்கிக்கொள்ள இந்த அரசு உதவி செய்யுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினரவர்கள் இந்த அதிர்ஷ்டச் சீட்டைக் கொடுத்து அதன் மூலம் லாபம் வரும்படியாகச் செய்து ஸ்கூட்டர்கள் வாங்கிக்கொள்ளச் செய்யலாமா என்று கூறி போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் விஷயத்தில் இவ்வளவு அக்கறை காட்டுவதற்காக அவர்கள் நன்றி தெரிவித்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இருக்கும் நிலை என்ன வென்றால், சர்க்கார் கோட்டாவிலே எவ்வளவு ஸ்கூட்டர்கள், லாம்பரட்டாக்கள் என்று குறியீட்டு எண் இருக்கிறது. அந்த அடிப்படையில் இன்னின்னாருக்குக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இதிலே சப்-இன்ஸ்பெக்டர்கள் விரும்பினால் கோட்டா எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அவர்களுக்குக் கிடைக்கும்.